# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (மார்ச்/ஏப்ரல் 2015)

## EDS 2133 Philosophical Foundations of Education
## (கல்வியின் தத்துவ அடிப்படைகள்)

07 JUN 2015

நேரம் : 03 மணித்தியாலங்கள்

விரும்பிய நான்கு (04) வினாக்களுக்கு விடை எழுதுக.

---

01.(அ) "கல்வியில் தத்துவத்தின் செல்வாக்கு மிகையாகக் காணப்பட்டாலும் அவை காலத்திற்குக் காலம் மாறும் தன்மை உடையதாகக் காணப்படுகின்றன." கல்வியில் தத்துவம் பெறும் செல்வாக்கினை மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(ஆ) "முன்பள்ளி தொடர்பான தத்துவக் கருத்துக்கள் இன்று வெகுவாக வரவேற்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன." இதனை புரோபலின் குழந்தைப் பருவ ஆக்கத்திறன் விருத்தி தொடர்பான கருத்துக்களோடு தொடர்புபடுத்தி விளக்குக.

(15 புள்ளிகள்)

02.(அ) நீர் வாழும் சூழலில் சமூக மாற்றத்தினை ஏற்படுத்த கல்வியை ஒரு கருவியாக எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதனை உதாரணங்கள் மூலம் ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) பாடசாலை மாணவர்களிடத்தே ஆக்கபூர்வமான கலாசார, விழுமியம் சார் பண்புகளைக் கட்டியெழுப்புவதில் ஒரு ஆசிரியர் எவ்வாறாக செயற்பட வேண்டும் என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

03.(அ) "தத்துவங்கள் ஆளுக்காள் வேறுபட்டுக் காணப்பட்டாலும் சில முக்கியமான கருத்துக்களை அவை வேறு பிரிப்பதில்லை" கார்ள் மாக்சினதும், விவேகானந்தரினதும் கல்வி சார் கருத்துக்களில் காணப்படும் ஒற்றுமைகளை ஒப்பீட்டு ரீதியில் நோக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) கார்ள் மாக்சினதும் விவேகானந்தரினதும் மொழி தொடர்பான வேறுபட்ட தத்துவக் கருத்துக்களின் செல்வாக்கு இன்றைய கல்வி முறைமைகளில் தாக்கம் செலுத்துவதனை விமர்சன ரீதியாக ஆராய்க.

(10 புள்ளிகள்)

04.(அ) "பிரச்சினைகளோடு திண்டாடி தனிப்பட்ட முறையில் பெறும் அனுபவங்களே உண்மையான கல்வியாகும்." ஜோன் டியூவியின் இக்கருத்தினை ஆதாரமாகக் கொண்டு இன்றைய கல்வி முறைகளில் இது சாத்தியப்படுகின்றதா என்பதனை ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) "மாணவர்களின் இலட்சியத்தினைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயற்படுவதன் மூலமே அவர்களிடமிருந்து சரியானவற்றினை எதிர்பார்க்க முடியும்." மேற்படி கூற்று தொடர்பாக உங்களது கருத்தினை தெளிவுபடுத்துக.

(13 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றிற்கு விளக்கக் குறிப்புக்களை சுருக்கமாகத் தருக.

(i) மிஷேல் பூக்கோவின் நவீன கல்விக் கருத்துக்கள்.
(ii) தாகூரின் ஒழுக்கம் தொடர்பான கருத்துக்களும் இன்றைய நிலைப்பாடும்.
(iii) "குழந்தையை சமூகததிற்காகப் பலியிடக்கூடாது."
(iv) ரூசோவின் பெண்கல்வி தொடர்பான இன்றைய நிலைப்பாடு.
(v) ஆசிரிய வாண்மை விருத்தியும் இன்றைய நிலையும்.

(5x5=25 புள்ளிகள்)

06.(அ) "விழுமியம் சார் கல்வியை வளர்ப்பதில் சீனத் தத்துவஞானி கன்.'.பூசியசின் கருத்துக்கள் சான்று பகிர்வதாக அமைகின்றன." இது எந்தளவிற்கு பொருத்தமுடையது என்பதனை ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) அலெக்சாண்டர் எனும் மாணவருக்கூடான அரிஸ்ரோட்டலின் தத்துவக் கருத்துக்கள் ஒவ்வொன்றினையும் இன்றைய பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஒவ்வொரு ஆசிரியரும் தமது மாணவர்களுக்கு நடைமுறைப்படுத்துகின்றனரா என்பதனை பரிசீலனை செய்க.

(13 புள்ளிகள்)

*****